காலாண்டுச் செய்திமடல்
ஜனவரி 2012 மலர் 7 இதழ் 4
மேலும் தகவல்களுக்கு **www.ciks.org** என்ற இணையத்தளத்தைப் பார்க்கவும்.

CIKS

# வளம்

## இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் செய்திமடல்



அனைவருக்கும் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் இனிய புத்தாண்டு வாழ்த்துகள்!

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கண்காணிப்பு குழுக் கூட்டம்

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் சமநிலை, திறன் வளர்ப்பு மற்றும் மேம்பாட்டிற்கான அறிவியல் பிரிவின் (SEED) திட்டக் கண்காணிப்புக் குழுக் கூட்டம் சென்னையில் டிசம்பர் 14 – 16ஆம் தேதிகளில் நடைபெற்றது. இந்தக் கூட்டம் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தினால் ஒருங்கிணைக்கப்பட்டது. இந்தத் துறையின் குறிப்பிட்ட பிரிவின் கீழ் பல்வேறு ஆய்வுத் திட்டங்களுக்கான நிதியுதவி பெறும் 20 விஞ்ஞானிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களுடைய செயல்திட்டங்கள் குறித்தும், அதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்தும் விவரித்தனர். இந்தக் கூட்டத்திற்கான வல்லுநர் குழுவில், புதுதில்லி யிலுள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் டாக்டர் உஷா தீக்ஷித், பெங்களூருவிலுள்ள எப்.ஆர்.எல்.எச்.டி. நிறுவனத்தின் டாக்டர் எம்.என்.பி. நாயர், மும்பையிலுள்ள சமூக அறிவியலுக்கான டாடா மையத்தின் டாக்டர் ஸ்வப்பன் காரெய்ன், கேரள வன ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் ஜோஸ் காலரக்கால் மற்றும் சென்னை யிலுள்ள இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் ஆராய்ச்சி இயக்குனர் டாக்டர் கே. விஜயலட்சுமி ஆகியோர் இடம் பெற்றனர். டிசம்பர் 15ஆம் தேதியன்று மாலை, கூட்டத்தில் கலந்து கொண்ட விஞ்ஞானிகள் அனைவரும், சென்னையிலுள்ள எம்.எம்.எம். முருகப்பா செட்டியார் ஆராய்ச்சி மையத்திற்கு சென்றிருந்தனர். டிசம்பர் 16ஆம் தேதியன்று, கூட்டத்தில் பங்கு பெற்ற விஞ்ஞானிகள் மற்றும் வல்லுனர் குழுவினர் அனைவரும் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் இயற்கைவழி ஆராய்ச்சிப் பண்ணைக்கு சென்றிருந்தனர். கூட்டத்தில் விவரிக்கப்பட்ட பல்வேறு செயல்திட்டப் பணிகள் குறித்த தங்கள் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் அலுவலர்களும், வல்லுனர் குழு உறுப்பினர்களும் பகிர்ந்து கொண்டனர்.




*வல்லுனர் குழு உறுப்பினர்கள் மற்றும் விஞ்ஞானிகளை வரவேற்று உரையாற்றும் டாக்டர் கே. விஜயலட்சுமி*



*இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் இயற்கைவழி ஆராய்ச்சிப் பண்ணையில் கூட்டத்தில் பங்கு பெற்றவர்கள்*



# செயல் திட்டங்கள் - ஒரு பார்வை

**இயற்கைவழி வேளாண்மை மூலம் தமிழ் நாட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டம்**

இந்தத் திட்டம் மும்பையிலுள்ள ஜாம்செட்ஜி டாடா டிரஸ்டின் (JTT) உதவியுடன் காஞ்சிபுரம், ராமநாதபுரம், திண்டுக்கல் மற்றும் நாகப் பட்டினம் மாவட்டங்களில் மே 2009 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நெல் ரகங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் காய்கறிகளில் சான்று மற்றும் உண்மைநிலை விதை உற்பத்தி 188.89 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இடுபொருள் உதவி மற்றும் பயிர் கடன் திட்டங்களின் கீழ், 749.96 ஏக்கருக்கு இடுபொருட்களும் பயிர் கடனும் வழங்கப்பட்டுள்ளன. நான்கு மாவட்டங்களிலும் இயற்கைவழி மாதிரி விளக்க வயல்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ், 168 இயற்கைவழி வீட்டுக் காய்கறித் தோட்டங்களும், 50 மாதிரி காய்கறித் தோட்டங்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. சமுதாய மற்றும் மாதிரி மண்புழு உரத் தயாரிப்புக் கூடங்களில் மண்புழு உர உற்பத்தி முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 27 சிறுதொழில்களும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருவதுடன் தேவையான பதிவேடுகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் பயனீட்டாளர் களுக்கு 12 குறுகிய காலப் பயிற்சிகளும், 5 பயிற்சியாளர் பயிலரங்குகளும் நடத்தப்பட்டன. மேலும், இரண்டு கல்விச் சுற்றுலாக்கள் முறையே திட்டப் பயனீட்டாளர்கள் மற்றும் ராமநாதபுரத்திலுள்ள ஸ்கெச் (SKECH) நிறுவன விவசாயிகளுக்கு நடத்தப்பட்டன. இவர்கள் காஞ்சிபுரம் மாவட்டம் சுக்கன்கொல்லையிலுள்ள இயற்கைவழி ஆராய்ச்சிப் பண்ணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

**தற்சார்பு வேளாண்மையை வலுப்படுத்துவதன் மூலம் கிராமப்புற வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் - மானாவரி சாகுபடிக்கான திட்டம்**

இந்தத் திட்டம் ஃபோர்டு மற்றும் ஹீவாஸ் நிறுவனங்களின் உதவியுடன் திருவண்ணாமலை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களிலுள்ள 15 கிராமங்களில் 1336.84 ஏக்கரில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட விவசாயிகளின் நிலங்கள் இயற்கைவழி வேளாண்மை சான்று பெறுவதற்காக தமிழ்நாடு அங்கக சான்று துறையில் (TNOCD) பதிவு செய்யப்பட்டுள்ளன. மாதாந்திர சங்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. திண்டுக்கல் மாவட்டத்தில் சென்ற பட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட சோளம், நிலக்கடலை மற்றும் சாமை அறுவடை செய்யப்பட்டுவிட்டன. திருவண்ணாமலை மாவட்டத்தில் 710 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த சாமை அறுவடை செய்யப்பட்டுள்ளது. எண்பத்தெட்டு பண்ணைக் குடும்பங்கள் இயற்கைவழி வீட்டுக் காய்கறித் தோட்டங்களை உருவாக்கி பராமரித்து வருகின்றன. பயனீட்டாளர்கள் மண்புழு உரத் தயாரிப்பிலும் ஈடுபட்டுள்ளனர். இந்தத் திட்டத்தின் கீழுள்ள பயனீட்டாளர்களுக்கு முதலுதவி செயல்முறைகள், இயற்கைவழி வேளாண்மை சான்று பெறுதல் மற்றும் பாரம்பரிய மருந்து தயாரிப்பு முறைகள் குறித்து ஐந்து பயிற்சிகள் நடத்தப்பட்டன.

**விவசாயத்தில் எலிக் கட்டுப்பாட்டில் சுற்றுச் சூழலுக்கு உகந்த மேலாண்மை முறைகள்**

இந்தத் திட்டம் இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் (DST) உதவியுடன் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள சீர்காழி தாலுக்காவில் ஜூலை 2010 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், சுற்றுச்சூழலுக்கு உகந்த எலிக்கட்டுப்பாட்டு முறைகள் சார்ந்த ஐந்து ஆய்வுகள் வயல்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அகணி, நெம்மேலி, இளையான்குடி மற்றும் பாகசாலை கிராமங்களில் 92 ஏக்கரில் இருளர்களின் உதவியுடன் எலிக் கட்டுப்பாட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. டிசம்பர் 27 - 29ஆம் தேதிகளில், சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் எலிகளைக் கட்டுப்படுத்துதல் குறித்த விழிப்புணர்வு முகாம் கந்தமங்கலம், பாகசாலை மற்றும் தோக்கலக்குடி கிராமங்களில் நடத்தப்பட்டன. மேலும், எலிக்கட்டுப்பாட்டு நடவடிக்கையும் 99.5 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டன. இந்தத் திட்டத்தின் கீழ் “பாம்புகளைப் பாதுகாப்பதன் மூலம் எலிக் கட்டுப்பாடு” என்ற தலைப்பில் விழிப்புணர்வு கூட்டங்கள் கொண்டல் மற்றும் வைத்தீஸ்வரன் கோவிலுள்ள அரசினர் பள்ளிகளில் நடத்தப்பட்டன. பாகசாலை கிராமத்தில் வேதியல் சாரா எலிக் கட்டுப்பாட்டு முறைகள் குறித்து இரண்டு பயிற்சிகள் நடத்தப்பட்டன.

**இயற்கைவழி வேளாண்மை மூலம் வாழ்வாதாரத்தை உருவாக்குதல்**

இந்தத் திட்டம் வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டிற்கான தேசிய வங்கியின் (NABARD) உதவியுடன் நாகப்பட்டினம் மாவட்டத்தின் சீர்காழி தாலுக்காவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் பயனீட்டாளர்களுக்கு வேப்பம் பிண்ணாக்கு, மண்புழு உரம், உயிர் உரங்கள் மற்றும் இனக் கவர்ச்சிப் பொறி போன்ற இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. திருந்திய நெல் சாகுபடி முறை மற்றும் சாதாரண சாகுபடி முறைக்கான ஒப்பீட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பாகசாலை கிராமத்தில் உவர்ப்பு தன்மையைத் தாங்கி வளரக்கூடிய ஸ்வர்னா சப் - 1 மற்றும் டி.ஆர்.வை - 3 போன்ற ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. ஆதமங்கலம் கிராமத்தில் உருவாக்கப்பட்டுள்ள தாவரக் கரைசல் தயாரிப்பகத்தை பொன்னி பெண்கள் சுய உதவிக் குழுவினர் பராமரித்து வருகின்றனர். உற்பத்தி மற்றும் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அகணி கிராமத்தில் வேப்ப விதை அரவை ஆலை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் விவசாயிகள் 36 பேர் CR-1009, ADT-38, BPT-5204, வெள்ளைப் பொன்னி மற்றும் பாரம்பரிய நெல் ரகங்கள் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் விவசாயிகள் மன்றங்களின் மூலம் தொழில்நுட்பப் பரிமாற்றம், கடன் ஆலோசனை மற்றும் விற்பனை பரிந்துரை செய்யும் திட்டம்**

இந்தத் திட்டம் வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டிற்கான தேசிய வங்கியின் (NABARD) உதவியுடன் நாகப்பட்டினம் மாவட்டத்தின் சீர்காழி தாலுக்காவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், விவசாயத் துணைப் பயிற்சியாளர்களுக்கு தரமான விதைகளைத் தேர்வு செய்தல், விதை நேர்த்தி, நாற்றங்கால் பராமரிப்பு, நிலத்தைப் பண்படுத்துதல், நாற்று நடும் கருவி மற்றும் கோனோவீடரை உபயோகிக்கும் முறைகள் குறித்து 57 பயிற்சிகள் நடத்தப்பட்டன. திட்டத்தின் நான்கு விவசாயப் பயிற்சியாளர்கள் தருமபுரியிலுள்ள மேச்சேரி ஆய்வு நிலையம் நடத்திய “வெள்ளாடு மற்றும்

# நிகழ்வுகள் - ஒரு அலசல்

செம்மறியாடு வளர்ப்பு" குறித்த பயிற்சியிலும் மதுராந்தகத்திலுள்ள தேசிய வேளாண் மையம் (NAF) நடத்திய "இயற்கைவழி வேளாண்மை மற்றும் பாதுகாப்பு" என்ற தலைப்பிலான பயிற்சியிலும் முறையே நவம்பர் 9 - 11ஆம் தேதிகளிலும், டிசம்பர் 14 - 16ஆம் தேதிகளிலும் கலந்து கொண்டனர்.

**தற்சார்பு வேளாண்மையை ஊக்குவிப்பதற்கான திட்டம்**

இந்தத் திட்டம் வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டிற்கான தேசிய வங்கியின் (NABARD) உதவியுடன் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள சீர்காழி தாலுக்காவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திண்டுக்கல்லிலுள்ள காந்திகிராம் கிராமியப் பல்கலைக்கழகத்தில் டிசம்பர் 17ஆம் தேதியன்று நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் கலந்து கொண்டு "சமுதாய இயற்கைவழி விதை உற்பத்தி மற்றும் விற்பனை - தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகள் குழுக்களுக்கான வருமான வாய்ப்பு" என்ற தலைப்பில் உரையாற்றினோம். இந்தத் திட்டத்தின் கீழுள்ள பெண் பயனீட்டாளர்கள் நவம்பர் 2 – 4 ஆம் தேதிகளில், மதுராந்தகத்திலுள்ள தேசிய வேளாண் மையத்தில் நடைபெற்ற "கறவை மாடுகள் பராமரிப்பு மற்றும் தீவனப்பயிர் உற்பத்தி" என்ற தலைப்பிலான பயிற்சியில் கலந்து கொண்டனர். நவம்பர் 11 - 12ஆம் தேதிகளில், பெங்களூருவில் நடைபெற்ற "பயோ ஃபாக் 2011" கண்காட்சியில் கலந்து கொண்டோம். "இயற்கைவழி விளைபொருட்கள் விற்பனை நெறிமுறைகள்" என்ற தலைப்பில் தருமபுரியில் நவம்பர் 17ஆம் தேதியன்று நடைபெற்ற கூட்டத்தில் சீர்காழி இயற்கைவழி விவசாயிகள் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**சுக்கன்கொல்லையில் நடந்த பணிகள்**

சுக்கன்கொல்லையில் உள்ள நமது ஆய்வுப் பண்ணையில் 91 பாரம்பரிய நெல் ரகங்கள் திருந்திய நெல் சாகுபடி முறையில் விதைப் பெருக்கம் செய்வதற்காகப் பயிரிடப்பட்டுள்ளன. இதில் 18 ரகங்கள் அறுவடை செய்யப்பட்டு விட்டன. *கிச்சிலி சம்பா, தூயமல்லி, சீரகச்சம்பா, குள்ளக்கார், ஆற்காடு கிச்சிலி சம்பா* மற்றும் வெள்ளை *பொன்னி* போன்ற பாரம்பரிய நெல் ரகங்கள் 3.55 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. மாதிரி வீட்டுக் காய்கறித் தோட்டத்தில் கத்தரி, தக்காளி, வெண்டை, கொத்தவரை, கீரைகள் போன்றவை சாகுபடி செய்யப்பட்டுள்ளன. மண்புழு உர உற்பத்தி மற்றும் *அசோலா* வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வேப்ப எண்ணெய் சோப்புக் கரைசலைப் பயன்படுத்தி சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் *சிறியாநங்கை* கஷாயத்தைப் பயன்படுத்தி சிவப்பு சிலந்தியை கட்டுப்படுத்துதல் போன்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**சர்வதேசக் கருத்தரங்கு**

நெதர்லாந்திலுள்ள ஆக்ஸ்பாம் - நோவிப் (OXFAM-NOVIB) மற்றும் ஹீவாஸ் (HIVOS) நிறுவனங்கள் இணைந்து "வேளாண் உயிரி பல்வகைமை, சிறு விவசாயிகள் மற்றும் மீளும் தன்மை" என்ற தலைப்பிலான சர்வதேசக் கருத்தரங்கை நடத்தியது. இந்த கருத்தரங்கிற்கான ஏற்பாடுகள் கென்யாவிலுள்ள பி.இ.எல்.யு.எம் (Participatory Ecological Land Use Management) சங்கத்தினால் ஒருங்கிணைக்கப்பட்டன. இந்தக் கருத்தரங்கு திக்கா (Thika) பகுதியில் அமைந்துள்ள தற்சார்பு வேளாண்மை சமுதாய வளர்ச்சி திட்டத்தைச் செயல்படுத்தும் நிறுவனத்தில் (Sustainable Agricultural Community Development Programme) நடைபெற்றது. நமது மையத்தின் சார்பாக, ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். மேலும், ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் ஐரோப்பா பகுதிகளைச் சேர்ந்த நிதியுதவி வழங்கும் நிறுவனங்கள், சமுதாயம் சார்ந்த நிறுவனங்கள், ஆராய்ச்சியாளர்கள், சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் இந்தக் கருத்தரங்கில் பங்கு பெற்றனர்.

**தன்னார்வ தொண்டு நிறுவனங்களைப் பற்றிய கூட்டம்**

அக்டோபர் 8ஆம் தேதியன்று, தி இன்ஸ்டிடியூட் ஆப் சார்டட் அக்கௌன்டன்ஸ் ஆப் இந்தியாவின் (The Institute of Chartered Accountants of India) தென் இந்தியப் பகுதிக்கான மன்றம், "தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் கணக்குப் பதிவுகள் மற்றும் மேலாண்மை" என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கை நடத்தியது. இந்தக் கருத்தரங்கில் ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் கலந்து கொண்டு "தொண்டு நிறுவனங்களுக்கான நிதி நிலை மற்றும் அதன் வருங்கால நிலை" என்ற தலைப்பில் உரையாற்றினார்.

**இங்கிலாந்திலிருந்து வந்திருந்த யோகா ஆசிரியர்கள்**

இந்தியாவிலுள்ள பல்வேறு யோகா பயிற்சி நிலையங்களைப் பார்வையிடுவதற்காக செல்வி. கோரா கெம்பால் அவர்களின் தலைமையில் இங்கிலாந்தை சேர்ந்த யோகா ஆசிரியர்கள் குழு இந்தியாவிற்கு வந்திருந்தது. இவர்களின் இந்தப் பயணம் கோலம் டூர்ஸ் அமைப்பினால் ஒருங்கிணைக்கப்பட்டது. அக்டோபர் 22ஆம் தேதியன்று, ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் இந்தக் குழுவினரைச் சந்தித்து "மருத்துவ முறை களை ஒருங்கிணைக்க முயலும் நோயாளிகளும், அவர்களுக்கு உதவும் வகையில் மருத்துவர்கள் மேற்கொள்ள வேண்டியவைகளும்" என்ற தலைப்பில் உரையாற்றினார். இதை தொடர்ந்து, விரிவான கலந்துரையாடலும் "இந்தியப் பாரம்பரிய அறிவியல்" என்ற தலைப்பில் சிறிய உரையும் நிகழ்த்தப்பட்டது.

**பணியாளர்களுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி**

அக்டோபர் 22ஆம் தேதியன்று, "மூலிகைத் தாவரங்களின் பயன்களும், முக்கியத்துவமும்" என்ற தலைப்பில் ஒரு நாள் திறன் வளர்ப்பு பயிற்சி பணியாளர்களுக்கு நடத்தப்பட்டது. சுக்கன்கொல்லையிலுள்ள தொழில்நுட்ப ஆதார மையத்தில் நடைபெற்ற இந்தப் பயிற்சியில் மையத்தின் தொழில்நுட்பப் பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இதில், மூலிகைகளின் பயன்கள், முக்கியத்துவம், சாகுபடி நுட்பங்கள் மற்றும் வீட்டுத் தோட்டங்களில் மூலிகைகளை வளர்த்தல் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தப் பயிற்சியை சென்னையிலுள்ள பாரம்பரிய மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி மையத்தின் (Centre for Traditional Medicine and Research) டாக்டர் டி. திருநாராயணன், டாக்டர் எஸ். ராஜ்குமார் மற்றும் செல்வி. வி. சுந்தரவள்ளி ஆகியோர் நடத்தினர்.

**பெங்களூருவில் நடைபெற்ற கூட்டம்**

மானாவாரி விவசாய மேம்பாட்டு கூட்டமைப்பின் (RRA Network) விரிவாக்கப்பட்ட மையக் குழுக் கூட்டம் டிசம்பர் 7 - 9ஆம் தேதிகளில் பெங்களூருவில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மையக் குழு உறுப்பினர் மற்றும் விதைகள் குறித்த பணிகளை மேற்கொள்ளும் குழுவின் ஒருங்கிணைப்பாளரான ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் கலந்து கொண்டார். பல்வேறு தலைப்புகளில் பணிபுரியும் குழுக்களின் செயல்பாடுகள் மற்றும் வளர்ச்சி குறித்தும் வருங்காலத்திற்கான திட்டங்கள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

**ஒருங்கிணைந்த தற்சார்பு சமுதாயப் பண்ணையை உருவாக்குதல்**

பெங்களூருவிலுள்ள குழந்தைகள் மற்றும் இளைஞர் பாதுகாப்பிற்கான தேவாலய மன்றத்தின் (CCCYC) வேண்டுகோளுக்கு இணங்க நாகப்பட்டினம் மாவட்டம், திருகடையூரில் ஒருங்கிணைந்த தற்சார்பு பண்ணை ஒன்றை உருவாக்கும் பணியை நமது மையம் துவங்கியுள்ளது. இதை சார்ந்து இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் மற்றும் சி.சி.சி.ஒய்.சிக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. இதை தொடர்ந்து, விரிவான கலந்துரையாடல் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இதில் சி.ஐ.கே.எஸ்., சி.சி.சி.ஒய்.சி., கே.என்.எச். (Kindernothilfe, Germany), சி.எம்.எஸ். (Catalyst Management Services) மற்றும் விருத்தி (Vrutti) ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

***உங்கள் கருத்துக்கள் மற்றும் விமர்சனங்களை info@ciks.org என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள்***

# புத்தகங்களும் வீடியோ படங்களும்

## இயற்கைவழி வேளாண்மை - ஒரு அறிமுகம்




இயற்கைவழி வேளாண்மையை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் இந்தப் புத்தகத்தில் இயற்கைவழி வேளாண்மை, இயற்கைவழி வீட்டுக் காய்கறித் தோட்டம், வேளாண் உயிரி பல்வகைமை மற்றும் பூச்சிகளும், பூச்சிக்கொல்லிகளும் என்ற நான்கு அத்தியாயங்களில் தகவல்கள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. மேலும் மாணவர்களின் புரிந்துக் கொள்ளுதலை மேம்படுத்தும் வகையில் ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவிலும் மாணவர்களுக்கான சில செயல்முறைப் பயிற்சிகளும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

**பிரதிகளைப் பெற விரும்புவோர் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்.**

# வருகையாளர் பதிவேடு

- அக்டோபர் 24ஆம் தேதியன்று, சென்னையிலுள்ள பரம்பரா நிறுவனத்தின் டாக்டர் எல்.என்.வி. விஸ்வநாதன் அவர்கள் மையத்தின் சென்னை அலுவலகத்திற்கு வந்திருந்தார்.
- நவம்பர் 10 மற்றும் 11ஆம் தேதிகளில், காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை பகுதியின் வேளாண் அலுவலர் திரு. ஏ. சுகுமார் அவர்கள் 78 விவசாயிகள் அடங்கிய குழுவுடன் நமது சுக்கன்கொல்லை பண்ணைக்கு வந்திருந்தார்.
- நவம்பர் 12ஆம் தேதி முதல் 14ஆம் தேதி வரை, சென்னை (NABARD) நபார்டு வங்கியை சேர்ந்த திருமதி. சியாமளா ராஜு, திருமதி. மினி ஜோசப் மற்றும் திருமதி லட்சுமி ஸ்ரீதர் ஆகியோர் நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி பகுதியில் உள்ள நமது மையத்தின் திட்டப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்தனர்.
- நவம்பர் 26ஆம் தேதியன்று, சென்னையிலுள்ள ஸ்ரீராம் இந்திராகாந்தி தேசிய திறந்த நிலை பல்கலைக்கழகச் சமுதாயக் கல்லூரியை (Shriram IGNOU Community College) சேர்ந்த திரு. ஜே. முரளிகிருஷ்ணன் அவர்கள் நமது மையத்தின் சுக்கன்கொல்லை ஆய்வுப் பண்ணைக்கு வந்திருந்தார்.
- நவம்பர் 27ஆம் தேதியன்று, நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தாலுக்காவை சேர்ந்த நமது ஆய்வுத் திட்டங்களின் பயனீட்டாளர்கள் குழு சுக்கன்கொல்லையிலுள்ள ஆய்வுப் பண்ணைக்கு வந்திருந்தனர்.
- டிசம்பர் 6ஆம் தேதியன்று, சென்னையிலுள்ள ஸ்ரீராம் இந்திராகாந்தி தேசிய திறந்த நிலை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 25 மாணவர்கள் அடங்கிய குழு சுக்கன்கொல்லையிலுள்ள நமது ஆய்வுப் பண்ணைக்கு வந்திருந்தனர்.
- டிசம்பர் 21ஆம் தேதியன்று, சேலத்திலுள்ள ராமன் நேச்சுரல்ஸ் நிறுவனத்தின் அலுவலர்கள் நமது சுக்கன்கொல்லை ஆய்வுப் பண்ணைக்கு வந்திருந்தனர்.
- டிசம்பர் 22ஆம் தேதியன்று, திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள தி ஃபாரஸ்ட் வே (The Forest Way) நிறுவனத்தின் திரு. வி. அருண் அவர்கள் 21 பேர் அடங்கிய மாணவர்கள் குழுவுடன் நமது சுக்கன்கொல்லை பண்ணைக்கு வந்திருந்தார்.

ஆசிரியர் குழு : இரா. அபர்ணா தூயவதி & டாக்டர் கே. விஜயலட்சுமி

வடிவமைப்பு : ரா. ஆனந்த் & எஸ். ரமேஷ்

நூல்-அஞ்சல்

பெறுநர்

CIKS

30, காந்திமண்டபம் சாலை, கோட்டூர்புரம், சென்னை - 600 085.

தொலைபேசி : 91-044-24471087, 24475862

மின்னஞ்சல் : **info@ciks.org** இணையத்தளம் : **www.ciks.org**